ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1984/6 - 2016 සැප්තැම්බර් මස 13 වැනි අඟහරුවාදා - 2016.09.13

*1984/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின்**
**............ ஆம் இலக்க கால்நடைகள் நியதிச்சட்டம்**

வடமேல் மாகாணத்தில் நிலைபேறுடைய அபிவிருத்தியின் பொருட்டு மாகாண கால்நடைகள் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் நோக்கங்களை அடைவதற்காகவும் கால்நடை பாதுகாப்பு, பராமரிப்பு, மேம்படுத்தல் மற்றும் விலங்கு நோய்களைத் தடுத்தல் சம்பந்தமான திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், தொழிற்படுத்தல் என்பன பொருட்டில் ஏற்பாடுகளைச் செய்தவற்காகவும் அத்துடன் இடைநேர்விளைவான விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டும் 1998 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, வடமேல் மாகாண விலங்குகள் கட்டுப்பாடு நியதிச்சட்டத்தை இல்லாதொழிக்கும் பொருட்டிலுமான நியதிச்சட்டமொன்றாகும். நீண்ட பெயர்.

இந்த நியதிச்சட்டம் 1969 ஆம் ஆணடின் 10 ஆம் இலக்க மற்றும் 1988 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, 2009 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க திருத்த சட்டங்களினால் திருத்தப்பட்ட 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குககள் சட்டம், 1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க விலங்கு உணவு சட்டம் மற்றும் 1983 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் அறுத்தல் கட்டளைச் சட்டம், 1992 ஆம் ஆணடின் 59 ஆம் இலக்க விலங்கு நோய்கள் சட்டம், 1952 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க தொற்று நோய் சட்டம், 1956 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க விசர்நாய்க்கடி தடுப்புச் சட்டம் 1998 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க கால்நடை மருத்துவ மற்றும் கால்நடை மருத்துவ தொழில் சட்டம், 1968 ஆம் ஆண்டின் ஊன் அறுத்தல் கட்டளைச் சட்டம், 2004 ஆம் ஆண்டின் இறைச்சிப் பரிசோதனைச் சட்டம் போன்ற சட்டங்களுக்கு ஏற்புடையதாகாது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக .

1. இந்த நியதிச்சட்டம் வடமேல் மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் ............ ஆம் இலக்க, கால்நடைகள் நியதிச்சட்டம் என அழைக்கப்படும். சுருக்கப் பெயர்.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

நடை முறைக்கு வரும் தேதி.

2. இந்த நியதிச்சட்டம் வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற அத்தகைய தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நியதிச் சட்டத்தின் நோக்கங்கள்.

3. இந்த நியதிச் சட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறாகும் :

(1) தேசிய கொள்கைக்கும் மாகாணத் தேவைகளுக்கும் அமைவாக கால்நடைகள் சார்ந்த கொள்கைகளைத் தயாரித்தல், திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல், கையாளுதல் அத்துடன் ஒழுங்குறுத்துகைக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

(2) வடமேல் மாகாணத்திற்குள் கால்நடை பாதுகாப்பு, ஒழுங்குறுத்துகை, பராமரிப்பு, விருத்தி செய்தல், விலங்கு உணவு மற்றும் மருந்து உற்பத்தி, பயன்படுத்துகை, விலங்கு நோய் தடுப்பு போன்றவற்றுக்காக சட்ட ரீதியிலான நிதி ஏற்பாடுகளை ஒதுக்குதல்.

(3) வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தை தாபித்தல்.

(4) வடமேல் மாகாண கால்நடை அபிவிருத்தி குழுவைத் தாபித்தல்.

(5) வடமேல் மாகாணத்தில் கால்நடைத்துறையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை பலப்படுத்துதல் .

(6) வடமேல் மாகாணத்தின் கால்நடைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வலய, பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுக்களையும் கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களையும் தாபித்தல்.

(7) உரிய தரத்துடன் கூடிய சுற்றாடல் நட்புறவுமிக்க பண்ணைகளை நடாத்திச் செல்லுதலும் சுகாதார ரீதியில் பாதுகாப்பானதும் , தரம் வாய்ந்ததுமான விலங்கு உற்பத்திகளை மாகாணத்திற்குள் உறுதி செய்தல்.

(8) வடமேல் மாகாணத்தில் விலங்கு மேம்பாட்டு நிதியத்தை தாபித்தலும் முகாமித்தலும்.

## பாகம் I

## கொள்கைகளை வகுத்தல், முகாமைத்துவம் மற்றும் ஒழுங்குறுத்துகை

விலங்கு உற்பத்தி, சுகாதார கொள்கைகளை வகுத்தல்.

4. தேசிய கொள்கைக்கும் மாகாண தேவைகளுக்கும் அமைவாக வடமேல் மாகாணத்திற்குள் விலங்கு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி துறைக்குரியதான கொள்கைகளை வகுக்கும் பணியானது விடயத்திற்குப் பொறுப்பான மாகாண அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாகாணத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள கிராமிய, பிரதேச வலய மற்றும் மாகாண கால்நடை அபிவிருத்தி குழுக்களினதும் அரச, பகுதி அரச, கூட்டுறவு, அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள், தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஆட்களின் பிரேரிப்புகளைப் பெற்றுக் கொள்ளலாம் .

கால்நடை வள அபிவிருத்தி திட்டம்.

5. மேல் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரேரிப்புகளையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்டு ஐந்து (05) வருட காலத்துக்கான கால்நடைவள அபிவிருத்தி திட்டங்கள் மாகாணப் பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு, மாகாண கால்நடை அபிவிருத்திக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

சேவைகளை வழங்குதல்.

6. மாகாண கால்நடை துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தேவையான கால்நடை வளங்கள், சுகாதாரம், சினையூட்டல், விரிவாக்கல், பயிற்சி, விற்பனை, மேம்பாடு மற்றும் மாகாணம் சார்ந்த ஆராய்ச்சி போன்ற சேவைகளை விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சினாலும் திணைக்களத்தினாலும் வழங்கப்படுதல் வேண்டும்.

விலங்கு அபிவிருத்தி மதியுரை பிரிவுகள் பிராந்திய கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் வலயங்கள் நிர்ணயித்தல்.

7. தேசிய கொள்கை, மாகாணத்தின் சனத்தொகை வளர்ச்சி, காணியின் அளவு, விலங்குகளின் தொகை, காலநிலை நிலைமைகள், நிருவாக எல்லைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விலங்கு அபிவிருத்தி மதியுரை பிரிவுகள், பிராந்திய கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் வலயங்கள் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

8. மாகாணத் தேவைகளுக்காக ஆராய்ச்சிப் பணிகள் தொடர்பிலான நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் நடாத்திச் செல்வதற்கும் இயலுமாதல் வேண்டும். ஆராய்ச்சி நிறுவனங்களைத் தாபித்தலும் நடைமுறைப் படுத்தலும்.

9. கால்நடை அபிவிருத்திப் பணிகளை மேம்படுத்துவதற்காக பங்குதாரர்களை வலுவூட்டும் நோக்கத்திற்காக மனிதவள அபிவிருத்தி பிரிவுகள் அல்லது கூறுகள் தாபிக்கப்படலாம் . மனிதவள அபிவிருத்திப் பிரிவுகளைத் தாபித்தல்.

பாகம் II

### மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தைத் தாபித்தல், அதன் கட்டமைப்பு, தத்துவங்கள் மற்றும் பணிகள்

10. இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களையும் ஏற்பாடுகளையும் நடைமுறைப் படுத்துவதற்காகவும் நோக்கங்களை அடைவதற்காகவும "வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களம்" என அழைக்கப்படும் திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். திணைக் களத்தை தாபித்தல்

11. வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதாரதிணைக்களமானது இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய அதன் பெயர் கொண்டு கால்நடை துறைக்குரிய அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்கு தொடரப்படுவதற்கும் வேறு சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கும் தத்துவமுள்ள கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். திணைக்களம் கூட்டிணைக் கப்பட்ட நிறுவன மொன்றென.

12. திணைக்களத்துக்கு கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிப்பதற்காக "வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதாரபணிப்பாளர்"என அழைக்கப்படும் இலங்கை விலங்கு உற்பத்தி, சுகாதாரசேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த கால்நடை மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் மாகாண அமைச்சரின் உடன்பாட்டின் மீது வடமேல் மாகாண ஆளுநரினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். மாகாண பணிப்பாளரை நியமித்தல்.

13. திணைக்களத்தின் நோக்கங்களையும் பணிகளையும் நடைமுறைப் படுத்துவதற்காக மேலதிக மாகாணப் பணிப்பாளர்கள் , விடயம் சார்ந்த நிபுணர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் , கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்கள், விலங்கு கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள், விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் உட்பட ஏனைய உதவி பணியாட்டொகுதியை நியமித்துக் கொள்ளலாம். திணைக் களத்தின் கட்டமைப்பு.

14. இந்த நியதிச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்றில் வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் சேவை புரிந்து கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர்களாக கருதப்படுதலும் வேண்டும். பணியாட் டொகுதியை நியமித்தல்.

15. (1) செயலாளரின் பொதுவான நிருவாகத்திற்கு அமைவாக இந்த நியதிச் சட்டத்தில் அல்லது இதற்கு இடைநேர்விளைவான விடயங்கள் சார்பில் விதித்துரைக்கப்படும் கட்டளைகளை அல்லது ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் தத்துவம் மாகாண பணிப்பாளருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும். மாகாணப் பணிப்பாளருக் குள்ள தத்துவம்.

(2) பணிப்பாளரினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தனது தத்துவங்களை திணைக்களத்திலுள்ள பிற உத்தியோகத்தர்களுக்கு கையளித்து நடைமுறைப்படுத்தலாம்.

(3) திணைக்களத்துக்குச் சொந்தமாகவுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அடங்கலாக பௌதிக, நிதி மற்றும் மனிதவளங்களின் முகாமைத்துவம் சம்பந்தமாக பணிப்பாளரானவர் செயலாளருக்கு பொறுப்புச் சொல்தல் வேண்டும்.

16. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப் படுத்துவதற்காக எந்தச் சந்தர்ப்பத்திலும் பண்ணையொன்றுக்கு அல்லது உற்பத்தி நிலையமொன்றுக்கு அல்லது விற்பனை நிலையமொன்றுக்கு அல்லது குளிரூட்டும் நிலையமொன்றுக்கு சென்று பரிசோதனை செய்வதற்கான தத்துவம் மாகாணப் பணிப்பாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு உள்ளது. பண்ணைகள் அல்லது உற்பத்தி நிலையங்கள் பரிசோதனை செய்யும் தத்துவம்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் கீழ் தனது தத்துவத்தைப் பிரயோகிக்கையில் தத்துவம் பெற்ற அத்தகைய உத்தியோகத்தருக்கு ஆள் எவரும் இடையூறு விளைவித்தலாகாது.

(3) மேல் 16 (1) ஆம் பிரிவின் கீழ் பரிசோதனையொன்றைச் செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவருடைய செயற்பாட்டிற்கு கீழ் தேவையான மாதிரிகள் அல்லது தகவல்களை வழங்குவதற்கு அவ்வாறு பரிசோதனைக்கு ஆட்பட்ட உரிமையாளர்கள் அல்லது இடத்திற்கு பொறுப்பான ஆள் அல்லது அங்கு இருக்கும் சகலரும் பொறுப்புச் சொல்தல் வேண்டும்.

(4) அங்கீகரிக்கப்பட்ட வழிமுறையில் மாதிரிகளை அல்லது தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தருக்கு எவ்விதத்திலும் உண்மைக்குப் புறம்பான அல்லது திசைமாற்றும் தகவல்களை வழங்காதிருத்தல் வேண்டும்.

திணைக்களத்தின் பணிகளும் பொறுப்புகளும்.

17. மாகாணத்தினுள் கால்நடை அபிவிருத்தி, பாதுகாப்பு, மேம்பாடு, விரிவாக்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை சார்பில் திணைக்களத்தினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(1) ஐந்து (05) வருடகால திட்டத்திற்கு அமைவாக வருடாந்த திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்துல்.

(2) விலங்கு நோய் கட்டுப்பாடு, தடுப்பு மற்றும் சிகிச்சை பணிகளின் மூலம் விலங்குகளின் ஆரோக்கிய நிலையை உறுதி செய்தல்.

(3) மாகாணத் தேவைகளுக்கு பொருத்தமானவாறு சுற்றாடலுக்கு ஏற்றவிதத்தில் உயர் விலங்குத் தொகையொன்றைப் பேணுவதற்காக சினையூட்டல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.

(4) விரிவாக்கல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்தல்.

(5) உற்பத்தி மற்றும் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(6) மாகாண ஆராய்ச்சி மற்றும் அளவைகளை மேற்கொள்தலும் அவற்றின் பெறுபேற்றினை சமூகமயப்படுத்தலும்.

(7) மாகாணத்திற்குப் பொருத்தமான தொழினுட்பத்தையும் பண்ணைகளை இயந்திர மயமாக்கலை அறிமுகப்படுத்துதலும்

(8) தேசிய, மாகாண மற்றும் பிராந்திய மட்டத்தில் ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் விலங்கு கட்டுப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிற நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளல்.

(9) கால்நடை பண்ணைகளின் அபிவிருத்திக்குத் தேவையான உயர் உற்பத்தி மற்றும் நடுகைப் பொருட்களை அறிமுகப்படுத்துதலும் விற்பனை செய்தலும்.

(10) கிராமிய, பிரதேச, வலய கால்நடை அபிவிருத்தி குழுக்கள், விலங்குப் பண்ணைகள், விலங்குகள் காப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், நடமாடும் விற்பனையாளர்கள், கால்நடை மருந்துகள், உபகரணங்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், கால்நடை துறையுடன் சம்பந்தப்பட்ட தொண்டர் அமைப்புகள் மற்றும் ஆட்களை பதிவு செய்தல், உரிமப்பத்திரம் வழங்குதல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல்.

(11) கால்நடை துறைக்குரிய தரவு முறைமைகள் யாவற்றையும் இற்றைப்படுத்தி நடாத்திச் செல்தல்.

(12) விலங்கு உற்பத்திகள் சுகாதார ரீதியில் பாதுகாப்பானதெனவும் தரம் வாய்ந்ததெனவும் உறுதிப்படுத்துதலும் பண்ணைகளின் தரமும்.

(13) மாகாணத் தேவைகளுக்கு அமைவாக இரசாயனக் கூடங்களை நடாத்திச் செல்தல்.

(14) மாகாணத்தினுள் விலங்கு நோய்களைத் தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்.

(15) விலங்கு பண்ணைகள், உற்பத்தி நிலையங்கள், குளிரூட்டல் நிலையங்கள், விற்பனை நிலையங்கள் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு அமைவாக சுற்றாடல் நட்புறவுமிக்கதாக நடாத்திச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தலும் அவற்றை ஒழுங்குறுத்துதலும்.

(16) விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு தொற்றும் நோய்களை கட்டுப்படுத்தலும் தடுத்தலும்.

(17) விலங்கு நலனோம்பலை உறுதி செய்தல் .

(18) வடமேல் மாகாணத்திற்குள் மிருகங்களை கொண்டு செல்வதற்கான அனுமதி வழங்குதல்.

(19) கால்நடை துறைக்குரியதாக மாகாண கண்காட்சிகள், விழாக்கள் மற்றும் போட்டிகளை ஒழுங்கு செய்தலும் இந்த துறையில் உள்ளவர்களை கௌரவித்தலும்.

(20) கிராமிய, பிரதேச, வலய கால்நடை அபிவிருத்தி குழுக்களின் கணக்குகளை பரிசோதித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

(21) விலங்கு உணவு, விலங்கு சினையூட்டல் பொருட்கள், கால்நடை மருந்துகள், இரசாயனப் பொருட்கள், உபகரணங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் விற்பனை செய்தல் மற்றும் பயன்படுத்துதல் சம்பந்தமான பணிகளை ஒழுங்குறுத்துதல்.

18. (1) இந்த நியதிச்சட்டத்தின் 05 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்படும் மாகாண கால்நடை அபிவிருத்தி திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மாகாணத்தில் உள்ள கால்நடை நிறுவனங்களின் அபிவிருத்திக்கும் விலங்குக் கட்டுப்பாட்டு பணிகளின் மேம்பாட்டுக்குமாக அடுத்து வரும் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தை ஒற்றோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து பணிப்பாளரினால் செயலாளரின் அங்கீகாரத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையானது எதிர்வரும் ஆண்டின் மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் III

### நிறுவனங்கள் மற்றும் ஆட்களை பதிவுசெய்தல்

19. வடமேல் மாகாணத்தினுள் கால்நடை துறை சம்பந்தமான பண்ணைகள் உற்பத்தி நிலையங்கள், விற்பனை நிலையங்கள், குளிரூட்டல் நிலையங்கள், கிராமிய, பிரதேச, வலய கால்நடை அபிவிருத்திக் குழுக்கள், விலங்குகள் காப்பாளர்கள், விநியோகஸ்தர்கள், நடமாடும் விற்பனையாளர்கள், கால்நடை மருந்துகள், உபகரணங்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள், வடமேல் மாகாணத்திற்குள் உற்பத்தி செய்யப்பட்ட கால்நடை உற்பத்திகளை கொள்வனவு செய்யும் நிறுவனங்கள், தொண்டர் அமைப்புகள் மற்றும் ஆட்கள் சார்பில் பணிப்பாளரினால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதோடு அது ஆண்டுக்கொரு தடவை புதுப்பிக்கப்படுதலும் வேண்டும்.

நிறுவனங்கள் மற்றும் ஆட்களை பதிவு செய்தல்.

20. பதிவு செய்யப்படுவதற்காக பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

பதிவுக்கான தேவைகள்.

(1) மாகாணப் பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் படிவத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படும் பதிவுக் கட்டணம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டத்தின் 84(1) ஆம் பிரிவின் கீழான கட்டளையின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள தகுதிவிதிகளுக்கும் தரங்களுக்கும் அமைவானதாதல் வேண்டும்.

(4) பூர்த்தி செய்யப்பட்டவேண்டிய சட்டத்தேவைகளை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

பதிவுச் சான்றிதழை கைமாற்றல்.

21. பதிவுசெய்யப்பட்ட சான்றிதழொன்றில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் மாகாணப் பணிப்பாளரின் அங்கீகாரமின்றி மாற்றுதல், கையளித்தல் அல்லது உடைமையாக்குதல் செய்யப்படலாகாது .

பதிவை நிராகரித்தல்.

22. 19 ஆம் பிரிவின் கீழ்பதிவுக்காகசெய்யப்படும் கோரிக்கையொன்று 20 ஆம் பிரிவின் கீழான தேவைகளை பூர்த்தி செய்யவில்லையாயின் பதிவு செய்யப்படாதிருக்க வேண்டுமென்பதோடு, அது பற்றி விண்ணப்பதாரருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

பதிவினை தற்காலிகமாக இடைநிறுத்து தல.

23. (1) 19 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்று, ஆளொருவர் தொண்டர் நிறுவனமொன்று இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்கு முரணாக செயற்படுகின்றதென அல்லது கட்டளைகள் மூலம் விதிக்கப்பட்டுள்ள தரங்களுக்கு அமைவாக செயலாற்றவில்லையென பணிப்பாளர் தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் பதிவினை தற்காலிகமாக இடைநிறுத்தலாம்.

(2) பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டால் அவ்வாறு செய்வதற்கு காரணமாய் அமைந்த விடயங்கள் பணிப்பாளரினால் பதிவுச் சான்றிதழ் பெற்ற உரிமையாளருக்கு எழுத்துமூலம் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(3) பதிவினை தற்காலிகமாக இடைநிறுத்தப்படும் சந்தர்ப்பத்தில் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் நியாயமான காலப்பகுதிக்குள் அதற்கு காரணமாய் அமைந்த விடயங்களை சீர்செய்து உரிய தேவைகளை பூர்த்தி செய்யும் சந்தர்ப்பத்தில் பதிவினை மீண்டும் வழங்குதல் வேண்டும் .

பதிவினை இரத்துச் செய்தல்.

24. இந்த நியதிச்சட்டத்தின் 23(3) ஆம் பிரிவுக்கு அமைவாக குறித்த நியாயமான காலப்பகுதிக்குள் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லையாயின் பதிவினை இரத்துச் செய்து அதுபற்றி விண்ணப்பதாரருக்கு அறிவித்தல் வேண்டும்.

பதிவு நிராகரித்தல் அல்லது இரத்துச் செய்தல் சம்பந்தமான மேன்முறையீடு.

25. இந்த நியதிச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் பதிவு நிராகரிக்கப்பட்டுள்ளதென அல்லது 24 ஆம் பிரிவின் கீழ் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதென அறிவித்தல் கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் உரிய தரப்பினால் அதற்கு எதிராக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேல் முறையீடொன்றைச் செய்யலாம்.

மேன்முறையீட்டு தத்துவங்கள்.

26. (1) இந்த நியதிச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் மேன்முறையீடொன்று கிடைத்தவிடத்து அது சம்பந்தமாக பரிசீலனை செய்து தீர்மானமொன்றை வழங்குமாறு அமைச்சரினால் செயலாளருக்குப் பணிப்பு விடுத்தல் வேண்டும்.

(2) செயலாளர் இது சம்பந்தமாக பரிசீலனை செய்ததன் பின்னர், பணிப்பாளரின் தீர்மானத்தை உறுதிப்படுத்துவதற்கு அல்லது திருத்துவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அமைச்சருக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) மேன்முறையீடு கிடைக்கப்பெற்று 45 நாட்களுக்குள் செயலாளரின் சிபாரிசு வழங்கப்பட வேண்டுமென்பதோடு, இறுதியானதும் முடிவானதுமான தீர்மானம் அமைச்சரின் தீர்மானமாகும்.

பதிவை நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அல்லது மூடும் கட்டளை.

27. (1) இந்த நியதிச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் கீழ் வழங்கப்பட்ட உரிமப்பத்திரமொன்று இல்லாமல் ஏதேனும் பண்ணையொன்று, குளிரூட்டல் நிலையமொன்று, உற்பத்தி நிலையமொன்றை அல்லது விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்லும் குற்றத்திற்கு ஏதேனும் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் குறித்த பண்ணையை, குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்தை அல்லது விற்பனை நிலையத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்லும் சந்தர்ப்பத்தில் பணிப்பாளரினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் மூடும் கட்டளையொன்றுக்காக செய்யப்பட்ட கோரிக்கையின் மீது குறித்த ஆள் மீண்டும் உரிமப்பத்திரமொன்றை பெற்றுக் கொள்ளும் வரை அந்த பண்ணையை குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்தை அல்லது விற்பனை நிலையத்தை மூடுவதற்கான கட்டளையொன்று வழங்கப்பட்டலாம் .

(2) மேற்போந்த பிரிவின் கீழான வழக்கு நடவடிக்கைகளின் போது பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட சான்றிதழ், அந்த சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் உரிமப்பத்திரம் இல்லாமல் குறித்த பண்ணையை, குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்தை அல்லது விற்பனை நிலையத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதாக குறிப்பிட்ட இந்த வெளிப்படுத்தல் முதற்தோற்றளவிலான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) ஆயினும், மேன்முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டு விசாரணையின் தீர்ப்பு கிடைக்கும் வரை மூடுவதனை தாமதப்படுத்துதல் வேண்டும்.

(4) இந்த நியதிச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் கீழும் மேன்முறையீட்டு விசாரணையில் பணிப்பாளரின் தீர்மானம் உறுதிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலும் குறித்த தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

28. மாகாணப் பணிப்பாளரினால் மாகாண விலங்கு நலனோம்பலைப் பேணுவது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதென இனங்காணும் சந்தர்ப்பத்தில் அதற்குரியதாக தற்காலிகமாக மூடும் கட்டளையொன்றை நீதவான் நீதிமன்றமொன்றிலிருந்து பெற்றுக் கொள்தல் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களில் மூடும் கட்டளை.

29. (1) இந்த நியதிச்சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மூடுதல் கட்டளைக்கு இயைவாக செயலாற்றுவதற்கு குறித்த ஆள் தவறும் சந்தர்ப்பத்தில் குறித்த பிரிவிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள பண்ணையை, குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்தை அல்லது விற்பனை நிலையத்தை மூடுவதற்கு பணிக்கப்பட்டதும் அதிகாரம் கையளிக்கப்பட்டதுமான கட்டளையொன்று நீதவானால் நீதிமன்ற பிசுக்காலுக்கு விடுக்க வேண்டுமென்பதோடு, குறித்த கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அக்கட்டளை வழங்கப்பட்ட திகதியிலிருந்து முழுமையான மூன்று நாட்களுக்கு முன்னர் அல்லது முழுமையான ஏழு நாட்களின் பின்னர் வராத திகதியொன்றுக்கு முன்னர் பிசுக்கால் அதற்கமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குறித்த பண்ணையை, குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்தை அல்லது விற்பனை நிலையத்தை மூடுவதற்காக பிசுக்கால் அல்லது குறித்த பணிக்காக அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரினால் தேவையெனக் கருதும் அத்தகைய உதவியாளர்களுடன் குறித்த பண்ணைக்கு, குளிரூட்டல் நிலையத்தை, உற்பத்தி நிலையத்திற்கு அல்லது விற்பனை நிலையத்திற்கு உள்நுழைவதற்கு இந்த கட்டளை பிசுகாலுக்கு அல்லது அந்த உத்தியோகத்தருக்கு போதுமான அதிகாரமாகும். மூடுதல்

## பாகம் IV

### கால்நடை அபிவிருத்தி மாகாண குழு

30. மாகாண கால்நடை நியதிச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனை இலகுவாக்கும் பொருட்டு கால்நடை அபிவிருத்தி மாகாண குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். மாகாண கால்நடை என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இந்தக் குழுவின் தலைவராவதோடு, மாகாண கால்நடை என்னும் வியடத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் செயலாளராதலும் வேண்டும். இந்தக் குழு மாகாண கமத்தொழில் குழு மற்றும் மாகாண நீர்ப்பாசனக் குழு என்பவற்றுடன் இணைந்து நடாத்தப்படலாம். மாகாண கால்நடை அபிவிருத்தி குழு.

31. (1) இந்தக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) மாகாண கால்நடை என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் மதியுரைச் சபையினால் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்கள் வலயங்களை பிரதிநிதித்து வப்படுத்தும் விதத்தில் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள்.

(ii) குருநாகல், புத்தளம் மாவட்ட செயலாளர்கள் அல்லது அவர்களினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதிகள் ;

(iii) வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ;

(iv) வடமேல் மாகாண கமத்தொழில் பணிப்பாளர் ;

(v) வடமேல் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் ;

(vi) குருநாகல், புத்தளம் கமநல சேவைகள் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள் ;

(vii) வடமேல் மாகாண காணி ஆணையாளர் ;

(viii) வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ;

(ix) வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ;

(x) வடமேல் மாகாண சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் ;

(xi) விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவர் ;

(xii) கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் மாவட்ட முகாமையாளர்கள் ;

(xiii) மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் வலயத்துக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர்கள்;

(xiv) தீர்மானிக்கப்படும் அரச வங்கிகளின் பிரதிநிதிகள் ;

(xv) வலய கால்நடை அபிவிருத்திக் குழுக்களின் தலைவர்கள்;

(xvi) கால்நடை அபிவிருத்தி சபையின் மாகாண பிரதிநிதி ஒருவர் ;

(xvii) விலங்கு உற்பத்தி சம்பந்தமான முதன்மை நிறுவனங்களின் தலைவர்கள் மூவர் ;

(xviii) பால் கொள்வனவு செய்யும் பிரதான கொள்வனவு நிறுவனங்களின் பிரதிநிதிகள் மூவர்.

(2) அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை அல்லது ஆட்களை தேவைக்கேற்ப குழுவுக்கு அழைக்கலாம்.

மகாண கால்நடை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர்களின் நியமனம்.

32. இந்த நியதிச்சட்டத்தின் 31(1) ஆம் உபபிரிவில் I தொடக்கம் XIII வரையுள்ள உறுப்பினர்கள் பதவி வழியாக நியமிக்கப்படுவதோடு , XIV தொடக்கம் XVI வரையுள்ள உறுப்பினர்கள் அமைச்சரினால் அவருடைய தற்றுணிபின் பேரில் நியமிக்கப்படலாம்.

நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம்.

33. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு (02) வருடங்களாகும்.

உறுப்புரிமை இல்லா தொழிதலும் வெற்றிடங்களை நிரப்புதலும்.

34. அமைச்சரினால் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைதல், பதவியிலிருந்து இராஜினாமா செய்தல், அமைச்சரினால் அவருடைய தற்றுணிபின் பேரில் பதவியிலிருந்து விலக்குதல், இரண்டு (02) தொடர் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளாமை அல்லது உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது மனநலம் குன்றியதன் மீது உறுப்பாண்மை இல்லாதொழிவதோடு, குறித்த வெற்றிடம் அமைச்சரினால் நிரப்பப்படுதலும் வேண்டும்.

குழு கூட்டங்கள்.

35. மாகாண குழுக்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படுதல் வேண்டும். தேவையாயின் தலைவரின் ஆலோசனையின் மீது செயலாளரினால் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படலாம்.

கூட்ட நடப்பெண்.

36. (1) குழுவின் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களுள் 1/4 ஆக இருத்தல் வேண்டும்.

(2) உறுப்பினர்களிடையே வெற்றிடம் நிலவுதல், குழு கூட்டங்களை நடாத்துவதற்கோ அல்லது கூட்டங்களில் தீர்மானம் எடுப்பதற்கோ பாதிப்பினை ஏற்படுத்தலாகாது .

குழுவின் தத்துவங்களும் பணிகளும்

37. மாகாண கால்நடை அபிவிருத்திக் குழுவின் தத்துவங்களும் பணிகளும் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்.

(1) தேசிய கொள்கைக்கும் மாகாணத் தேவைகளுக்கும் அமைவாகவும் இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் சம்பந்தமாகவும் கொள்கைகளைத் தயாரிப்பதற்கு சிபாரிசுகளையும் பிரேரிப்புகளையும் சமர்ப்பித்தல்.

(2) இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கையாளுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல்.

(3) கால்நடை அபிவிருத்திக்கான ஐந்து (05) வருடகால திட்டம் உட்பட குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் நடுத்தவணைக்கால, நீண்டகால மற்றும் ஏனைய அபிவிருத்தித் திட்டங்களை அங்கீகரித்தல்.

(4) மாகாண கால்நடை அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான வளங்கள், வழிகாட்டல் உட்பட ஒத்துழைப்பை வழங்கி அது தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை எடுத்தலும் மதிப்பீடு செய்தலும்.

(5) மாகாணத்தினுள் ஏதேனும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனமொன்று, அமைப்பொன்று, ஆதார நிலையமொன்று, சமவாயமொன்று, கருத்திட்டமொன்று, நிகழ்ச்சித்திட்டமொன்று அல்லது அத்தகைய ஒருங்கிணைவான நிறுவனம், ஆள், ஆட்கள் குழு என்பவற்றினால் கால்நடை விரிவாக்கல், மேம்பாடு, கல்வி, சேவைகளை வழங்கும் பொருட்டும் ஆராய்ச்சிகளின் பொருட்டும் ஏதேனும் கருத்திட்டமொன்றை அல்லது நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அங்கீகாரம் வழங்குதல் அத்துடன் நிபந்தனைகளை மீறும் சந்தர்ப்பங்களில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்.

38. (1) மாகாண குழுவினால் அதன் கூட்டங்களுக்கான பணிகளை நடாத்திச் செல்லும் பொருட்டு தேவையான நடவடிக்கை முறையைத் தயாரித்துக் கொள்ளலாம். நடவடிக்கை முறையும் கலந்து கொள்ளல் படியும்.

(2) மாகாண குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்பவர்களுக்காக அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் படியொன்று மாண்புமிகு ஆளுநரின் அங்கீகாரததின் மீது செலுத்தப்படலாம்.

## பாகம் V

### கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்கள் சங்கங்கள்

39. கிராம உத்தியோகத்தர் பிரிவொன்றில் அல்லது பகுதியொன்றில் அல்லது சிலவற்றில் விலங்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஒன்று சேர்த்து விலங்கு கட்டுப்பாட்டுத்துறைக்கு அமைவாக அல்லது கூட்டாக கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களை தாபித்துக் கொள்ளலாம் என்பதோடு, இந்த சங்கங்கள் ஒவ்வொன்றும் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுதலும் வேண்டும். கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களை தாபித்தலும் பதிவு செய்தலும்

40. கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்கள் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய அதன் பெயர் கொண்டு கால்நடை துறைக்குரிய அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்கு தொடரப்படுவதற்கும் வேறு சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கும் தத்துவமுள்ள கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். கூட்டிணைக் கப்பட்ட நிறுவன மொன்றென

41. கிராமிய மட்டத்தில் கால்நடை துறையில் ஈடுபட்டுள்ளவர்களை இணைத்து வலுவூட்டுவதன் மூலம் இந்தத் துறையை அபிவிருத்தி செய்தல் இந்த சங்கங்களைத் தாபிப்பதன் நோக்கமாகும். சங்கங்களை தாபிக்கும் நோக்கம்.

42. உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகள் உறுப்புரிமை.

(1) இலங்கை பிரசையாக இருத்தல்

(2) 18 வயதிற்கு குறையாதிருத்தல்

(3) கால்நடை அபிவிருத்தி சங்க அதிகார பிரதேசத்தில் பண்ணை அமைந்திருத்தல்.

(4) பண்ணை விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

கட்டமைப்பும் பதவிக் காலமும்.

43. அனைத்து கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களும் அதன் உத்தியோத்தர்களாக தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் உட்பட ஆறு (06) உறுப்பினர்களையும் கொண்ட செயற்குழு ஒன்றை நியமித்துக் கொள்ள வேண்டுமென்பதோடு, அவர்களுடைய பதவிக் காலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு (01) வருடமாகும் .

சங்கங்களின் யாப்பு.

44. (1) கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களின் யாப்புகள் பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த யாப்புக்கு அமைவாக அனைத்து கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களும் செயலாற்றுதல் வேண்டும்.

தத்துவங்களும் பணிகளும்.

45. கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களின் தத்துவங்களும் பணிகளும் பின்வருமாறாகும்.

(1) மாகாண திட்டத்திற்கு அமைவாக தங்களுடைய சங்கத்தின் அதிகாரப் பிரதேசம் சார்பில் கால்நடை அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் ஒழுங்குறுத்துதல்.

(2) உறுப்பினர்களின் பண்ணைகளின் அபிவிருத்திக்கான வசதிகளை ஏற்பாடு செய்தலும் இயைபுள்ள நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பும்.

(3) கால்நடை துறைக்குரிய தங்களுடைய அதிகாரப் பிரதேசத்திற்குள் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குதல்.

(4) துறைசார்ந்த தரவு முறையொன்றை இற்றைப்படுத்தி பேணுதலும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய தரப்பினர்களுக்கு வழங்குதலும்.

(5) சங்கத்தின் உறுப்பினர்களுக்கான கடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(6) சங்கத்தின் நிதியங்களை அதிகரித்துக் கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(7) உறுப்பினர்களின் நலனோம்பலுக்கான பணிகளை செய்தல்.

(8) பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுவை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பிரதிநிதிகளை பெயர் குறித்தல்.

(9) காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒத்தாசை நல்குதல்.

(10) புதிய விவசாயிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்

46. (1) சங்கத்தின் கூட்டங்கள் மாதாந்தம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்படுதல் வேண்டுமென்பதோடு, பெரும்பான்மை உறுப்பினர்களின் கோரிக்கையின் பேரில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படலாம்.

(2) குழுவின் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களுள் 1/3 ஆக இருத்தல் வேண்டும்.

உறுப்புரிமை அல்லது பதவி இல்லாதொழிதல்.

47. (1) பின்வரும் காரணங்களின் மீது உறுப்பாண்மையானது இல்லாதொழியும் .

(i) இராஜினாமா செய்தல்

(ii) இரண்டு (02) தொடர் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளாமை

(iii) மரணம் அல்லது மனநலம் குன்றியுள்ளமை.

(IV) யாப்புக்கு முரணாக செயலாற்றுதல் அல்லது கால்நடை துறைசார்ந்த பணிகளிலிருந்து விலகியதன் காரணமாக பெரும்பான்மை உறுப்பினர்களின் விருப்பத்தின் மீது விலக்குதல்.

(2) உறுப்புரிமை இல்லாமற் போதல் அல்லது இராஜினாமா செய்தல் அல்லது சங்க உறுப்பினர்களின் பெரும்பான்மையானோரின் விருப்பத்தின் பேரில் பதவி இல்லாதொழியும்.

48. கிராமிய கால்நடை அபிவிருத்தி நிதியம் பின்வரும் தோற்றுவாய்களைக் கொண்டிருக்கும். சங்கத்தின் நிதியம்.

(i) அங்கத்துவப்பணம் ;

(ii) அரசாங்க, மாகாண, அரச சார்பற்ற அமைப்புகளின் நன்கொடை ;

(iii) தனிப்பட்டவர்களின் நன்கொடை ;

(iv) நிதியத்தின் வட்டி மற்றும் இலாபம் ;

(V) பிற தோற்றுவாய்களிலிருந்து கிடைக்கப் பெறும் பணத்தொகை.

49. சங்கங்களின் நிதியக் கணக்குகள் சங்கசங்களின் நிதியங்களுக்கான கணக்குகள்.

(1) சங்கங்களின் நிதியங்களுக்கான கணக்குகள் அரசாங்க வங்கியொன்றில் பேணப்பட வேண்டுமென்பதோடு, செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சங்கங்களின் நிதியங்களுக்கான கணக்குகள் பேணப்படுதல் வேண்டும்.

(2) நிதியத்தின் கணக்குகளை மாகாணப் பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரினால் வருடாந்தம் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

50. (1) அதன் அதிகாரப் பிரதேசத்திலுள்ள கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களின் பணிகளை மேற்பார்வை செய்தல், ஆவணங்களை பரிசீலனை செய்தல், வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்குதல், விலங்குகள் ஆலோசகருக்கு கையளிக்கப்படும் . சங்கங்களின் மேற்பார்வை.

(2) பணிப்பாளரினால் அதிகாரம் கையளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களை மேற்பார்வை செய்தவற்கு மற்றும் அதன் ஆவணங்களை பரிசீலனை செய்வதற்கு முடியும்.

51. (1) பதிவு செய்யப்பட்ட கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கமொன்றின் பின்வரும் விடயமொன்று அல்லது சில விடயங்கள் மீது பதிவினை இரத்துச் செய்வதற்கு அல்லது கலைத்து மூடுவதற்கு பணிப்பாளரினால் அரசாங்க சேவையைச் சேர்ந்த பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரை கலைத்து மூடுநர் ஒருவராக நியமிக்கலாம். சங்கங்களின் மேற்பார்வை.

(i) சங்கமொன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 11 பேர்களைவிட குறைவாகவிருத்தல் ;

(ii) ஒரு வருடத்துக்கு மேலாக சங்கம் செயற்பாடற்றிருத்தல் ;

(iii) சங்க யாப்புக்கு முரணாக செயலாற்றுதல் ;

(iv) சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயலாற்றத் தவறியுள்ளதாக வெளிப்படுத்தி குறித்த சங்கத்தின் உறுப்பினர்களுள் 2/3 குறையாத எண்ணிக்கையினரினால் கலைத்து மூடுமாறு பணிப்பாளருக்கு கோரிக்கை விடுத்தல்.

(2) மேல் 51(1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட கலைத்து மூடுநருக்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரத்துடன் பின்வரும் தத்துவங்கள் உள்ளன.

(i) சங்கத்தின் கடனாளிகளுக்கு இடையில் முன்னுரிமை சம்பந்தமாக தீர்மானித்தல் ;

(ii) சங்கத்தின் சொத்துக்களை விற்பனை செய்தல்.

(iii) சங்கத்தினால் அல்லது அதற்கு எதிரான உரிமைக் கோரிக்கைகள் எதுவுமிருப்பின் அவற்றைத் தீர்த்தல்.

(iv) சங்கத்தின் சொத்துக்களை உரிய விதத்தில் பகிர்ந்தளித்தல்.

(3) கலைத்து மூடுநரினால் செய்யப்படும் இரத்துச் செய்தல் தொடர்பிலான அறிவித்தல்கள் முறையே சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவரும் பத்திரிகைகளில் வெளிப்படுத்துதல் வேண்டும்.

(4) சங்கத்தை கலைத்து மூடும் போது அதன் நிதியங்களை களைத்து மூடும் செலவினை ஈடுசெய்வதற்காக முதலில் பயன்படுத்த வேண்டுமென்பதோடு, அதன் பின்னர் அதன் பொறுப்புகளிலிருந்து விடுபடுவதற்கு பயன்படுத்துதல் வேண்டும். கலைத்து மூடும் நடவடிக்கை பூர்த்தி செய்ததன் பின்னர் மீதியாகும் மேலதிகத் தொகையை பால் மேம்பாட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

## பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுக்கள்

பிரதேச கால்நடை அபிவிருத்திக் குழுக் களைத் தாபித்தல்.

52. அனைத்து பிரதேச கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்கள் பிரிவுகள் சார்பிலும் பிரதேச கால்நடை அபிவிருத்திக் குழுவொன்று தாபிக்கப்பட்டு திணைக்களத்தின் கீழ் பதிவு செய்தலும் வேண்டும்.

குழு யாப்பு.

53. (1) பிரதேச கால்நடை அபிவிருத்திக் குழு யாப்பானது பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்த யாப்புக்கு அமைவாக பிரதேச கால்நடை அபிவிருத்திக் குழுக்கள் யாவும் செயலாற்றுதல் வேண்டும்.

குழுவின் கட்டமைப்பு.

54. (1) குழுவின் கட்டமைப்பு பின்வருமாதல் வேண்டும்.

(i) கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்.

(ii) விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள்

(iii) கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட பிரதிநிதிகளிலிருந்து அவர்களுடைய பெரும்பான்மை விருப்பத்தின் பேரில் நியமிக்கப்படும் 10 பேர்கள்.

(iv) கமத்தொழில் மேம்பாட்டு உத்தியோகத்தர் ஒருவர்.

(v) பொது சுகாதார பரிசோதகர் ஒருவர்.

(vi) மாகாண கமத்தொழில் பணிப்பாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் கமத்தொழில் ஆலோசகர் ஒருவர்.

(vii) தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர்.

(viii) பிரதேச செயலாளரினால் துறைசார்ந்த பெயர் குறித்து நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர்.

(ix) உள்ளூராட்சி நிறுவனமொன்றின் சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர்.

(x) வடமேல் மாகாணத்தினுள் பால் கொள்வனவு செய்யும் கம்பனிகளின் பிரதேச பிராந்திய பிரதிநிதிகள்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரின் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பத்தில் குறித்த துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் கால்நடை மருத்துவ உத்தியோகத்தரின் சிபாரிசின் மீது வலயத்துக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளரினால் வேறு ஓர் பிரதிநிதியை பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

55. கால்நடை துறை மற்றும் அது சம்பந்தமான அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சார்பில் குழுவின் அங்கீகாரத்தின் மீது இணை உறுப்புரிமை பெற்றுக் கொள்ள இயலுமாகும் என்பதோடு, அவர்களுக்கு வாக்குரிமையோ அல்லது பதவிகளை வகிக்கவோ உரிமை கிடைக்கப்பெறாது. இணை உறுப்புரிமை.

56. குழுவின் தலைவர் கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்க பிரதிநிதிகளிலிருந்து நியமிக்கப்பட வேண்டுமென்பதோடு, செயலாளர் உத்தியோகபூர்வமாக பிரிவின் கால்நடை மருத்துவ உத்தியோகத்தராதலும் வேண்டும். குழுவின் தலைவரும் செயலாளரும்.

57. பதவிவழியல்லாத உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கத்தில் அவருடைய பதவிக்காலம் இல்லாதொழிவதன் மீது இல்லாதொழியும். உறுப்பினர்களின் பதவிக் காலம்

58. குழுக்களின் கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படுதல் வேண்டுமென்பதோடு. குழுவின் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களுள் 1/3 ஆக இருத்தலும் வேண்டும். குழுக் கூட்டங்களும் நடப் பெண்ணும்.

59. குழுவின் பணிகள் பின்வருமாறாகும் : குழுவின் பணிகள்.

(1) மாகாண மற்றும் கிராமிய கால்நடை அபிவிருத்தி திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு பிரதேச கால்நடை அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல்.

(2) பிரதேச தேவைகளுக்கு அமைவாக விசேட கருத்திட்டங்களை தயாரித்து உரிய நிறுவனங்களினால் ஒருங்கிணைக்கப்பட்டு நிதி ஏற்பாடுகளை ஒதுக்கிக் கொள்ளல்.

(3) கிராமிய கால்நடை அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிப்பதற்கு தேவையான ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் வழங்குதல்.

(4) கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களிலிருந்து தொடர்புபடுத்தப் படும் விடயங்கள் சம்பந்தமாக செயலாற்றுதல்.

(5) பல்வேறுபட்ட நிதித் தோற்றுவாய்களிலிருந்து கால்நடை துறைக்குரியதாக கிடைக்கப் பெறும் நிதி ஏற்பாடுகளை வினைத்திறமையுடனும் பயனுள்ள வகையிலும் பயன்படுத்துவதனை உறுதி செய்தல்.

(6) வலய கால்நடை அபிவிருத்தி குழுவுக்கு பிரதிநிதிகளை பெயர் குறிப்பிடுதல்.

(7) கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களுக்கும் வலய கால்நடை அபிவிருத்தி குழுக்களுக்கும் இடையிலான ஒருங்கிணைப்பு .

(8) பிரதேச குழு அதிகார பிரதேசங்கள் சார்பில் கால்நடை துறைக்கு உரியதாக கிடைக்கும் நிதி ஏற்பாடுகளை பயனாளிகளுக்கு ஒதுக்குதல்.

(9) விலங்கு கட்டுப்பாட்டுக்குரியதான பொருட்களை பயனாளிகளுக்கு இலகுவாக பெறுவதற்கு இயலுமாகும் வகையில் நடவடிக்கை எடுத்தல்.

## பாகம் VII

### வலய கால்நடை அபிவிருத்தி குழுக்கள்

60. இந்த நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்கப்படும் சகல வலயங்கள் சார்பிலும் வலய கால்நடை அபிவிருத்திக் குழுவொன்று தாபிக்கப்பட்டு திணைக்களத்தின் கீழ் பதிவு செய்தலும் வேண்டும். வலய கால்நடை அபிவிருத்தி குழு.

61. பிரதேச கால்நடை அபிவிருத்திக் குழு யாப்பானது பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். இந்த யாப்புக்கு அமைவாக வலய கால்நடை அபிவிருத்திக் குழுக்கள் யாவும் செயலாற்றுதல் வேண்டும். குழு யாப்பு.

குழுவின் கட்டமைப்பு.

62. (1) குழுவின் கட்டமைப்பு பின்வருமாதல் வேண்டும்.

(i) வலயத்துக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளர் ;

(ii) பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுக்களின் தலைவர்கள் ;

(iii) மாகாண பணிப்பாளரினால் நியமிக்கப்படும் கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்கள் நால்வர் ;

(iv) மாகாண பணிப்பாளரினால் நியமிக்கப்படும் சிரேட்ட விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் நால்வர் ;

(v) கால்நடை ஆய்வு உத்தியோகத்தர் ;

(vi) மாகாண கமத்தொழில் பணிப்பாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உதவிப் பணிப்பாளர் ஒருவர் ;

(vii) கால்நடை அபிவிருத்தி சபையினதும் பால் கொள்வனவு செய்யும் கம்பனிகளினதும் பிரதிநிதிகள் ;

(viii) கமத்தொழில் காப்புறுதி சபையின் பிரதிநிதி ஒருவர் ;

(ix) மாவட்ட செயலாளரின் பிரதிநிதி ஒருவர் ;

(x) சுற்றாடல் அதிகாரசபையின் பிரதிநிதி ஒருவர் ;

(xi) மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர்.

இணை உறுப்புரிமை.

63. கால்நடை துறை மற்றும் அதுசம்பந்தமான அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சார்பில் குழுவின் அங்கீகாரத்தின் மீது இணை உறுப்புரிமை பெற்றுக் கொள்ள இயலுமாகும் என்பதோடு, அவர்களுக்கு வாக்குரிமையோ அல்லது பதவிகளை வகிக்கவோ உரிமை கிடைக்கப்பெறாது.

குழுவின் தலைவரும் செயலாளரும்.

64. குழுவின் தலைவர் பிரதேச கால்நடை அபிவிருத்தி குழு தலைவர்களிலிருந்து நியமிக்கப்பட வேண்டுமென்பதோடு, செயலாளர் உத்தியோகபூர்வமாக வலயத்துக்குப் பொறுப்பான பிரதிப் பணிப்பாளராதலும் வேண்டும்.

பதவிக் காலம்.

65. பதவிவழியல்லாத உத்தியோகத்தர்களின் பதவிக்காலம் பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுவில் அவருடைய பதவிக்காலம் இல்லாதொழிவதன் மீது இல்லாதொழியும்.

குழுக் கூட்டங் களும் நடப் பெண்ணும்.

66. குழுக் கூட்டங்கள் நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படுதல் வேண்டுமென்பதோடு. குழுவின் கூட்ட நடப்பெண் உறுப்பினர்களுள் 1/3 ஆக இருத்தலும் வேண்டும். விசேட சந்தர்ப்பங்களில் தலைவருக்கு அறியச் செய்வித்து செயலாளரினால் மேலதிக கூட்டங்களை கூட்டலாம்.

குழுவின் பணிகள்.

67. குழுவின் பணிகள் பின்வருமாறாகும் :

(1) வலய கால்நடை அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் செயற்பாட்டு பங்களிப்பினை வழங்குதல்.

(2) மாகாண கால்நடை அபிவிருத்திக் குழுவுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுத்தல்.

(3) பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுக்களிலிருந்து சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல்.

(4) மாகாண கால்நடை அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கு பிரேரிப்புகளை முன்வைத்தல்

(5) பிரதேச கால்நடை அபிவிருத்தி குழுக்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்.

(6) பால் மேம்பாட்டு நிதியத்தின் முகாமைத்துவ சபைக்கு பால்துறை சார்ந்த பிரதிநிதிகள் மூவரை பெயர் குறித்தல் .

பாகம் VIII

**பால் மேம்பாட்டு நிதியம்**

68. இதனகத்துப் பின்னர், பால் மேம்பாட்டு நிதியம் என அழைக்கப்படும் நிதியமொன்று தாபிக்கப்படும் . பால் மேம்பாட்டு நிதியம்.

69. நிதியமானது இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையுமுடைய அதன் பெயர் கொண்டு வழக்கு தொடர்வதற்கும் அதற்கெதிராக வழக்கு தொடரப்படுவதற்கும் வேறு சட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாக விளக்கமளிப்பதற்கும் தத்துவமுள்ள கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். நிதியம் கூட்டிணைக் கப்பட்ட நிறுவன மொன்றென.

70. வடமேல் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் நிதியத்தின் பொறுப்பினை வகித்தல் வேண்டும். நிதியத்தின் பொறுப்பு.

71. பால் மேம்பாட்டு நிதியத்தின் நிறுவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு சம்பந்தமாக முகாமைத்துவ சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும். நிதியத்தின் முகாமைத் துவ சபை.

72. (1) இதனகத்துப் பின்னர் சபையென அழைக்கப்படும் பால் மேம்பாட்டு நிதியத்தின் முகாமைத்துவ சபையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். முகாமைத் துவ சபையின் கட்டமைப்பு.

(i) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் ;

(ii) மில்க்கோ நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் மற்றும் தனியார் பால் கொள்வனவு செய்யும் இரண்டு நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் இருவர் ;

(iii) பசுக்கள் கட்டுப்பாடு என்னும் விடயத்துறையைச் சார்ந்த நிபுணர் ஒருவர் ;

(iv) கால்நடை அபிவிருத்தி வலய குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் பால் துறையில் செயலாற்றும் பிரதிநிதிகள் இருவர்.

(2) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் தவிர ஏனைய பிரதிநிதிகள் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

73. (1) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் பதவி வழியாக சபையின் தலைவராவார்.

(2) மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் சபையின் செயலாளராவார்.

74. (1) அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவரின் பதவிக் காலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (03) வருடங்கள் ஆகுமென்பதோடு, கிராமிய அல்லது வலய கால்நடை அபிவிருத்தி குழுக்களின் உறுப்புரிமை இல்லாதொழிவதன் மீது பதவிக் காலமும் இல்லாதொழியும். சபையின் உறுப்பினர் களை நியமித்தல்.

(2) அமைச்சரினால் நியமனஞ் செய்யப்படும் உறுப்பினர் ஒருவர் அவருடைய பதவிக்கான பொறுப்புகளை உரிய வகையில் புரியவில்லையென அல்லது அந்த பதவியை வகிப்பது பாதகமாகுமென அமைச்சர் எண்ணும் எச்சந்தர்ப்பத்திலும் குறித்த பதவியிலிருந்து நீக்குவதற்கு அமைச்சரானவருக்கு தத்துவமுள்ளது. பதவிக் காலம், உறுப்புரிமை இல்லாதொழிதல்.

(3) பதவி வழிமீது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவருடைய பதவி வகித்தல் முடிவுறுவதுடன் அவருடைய உறுப்புரிமை இல்லாதொழியும்.

(4) அமைச்சருக்கு முன்வைக்கப்படும் எழுத்துமூல கோரிக்கையொன்றின் மூலம் பதவி வழிமீது நியமிக்கப்பட்ட உறுப்பினர் தவிர ஏனைய உறுப்பினர்களுக்கு அவர்களுடைய உறுப்புரிமையிலிருந்து கேட்டு விலகுவதற்கு வாய்ப்புள்ளது.

(5) உறுப்பினர் ஒருவரின் மரணம் அல்லது மனநலம் குன்றியதன் மீது உறுப்புரிமை இல்லாதொழியும்.

(6) உறுப்பினர் ஒருவர் விலகுவதனால் அல்லது நீக்கப்படுவதனால் உருவாகும் வெற்றிடமொன்றுக்கு மீள நியமிக்கப்படும் ஆள் ஒருவரின் பதவிக்காலம் முன்னைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட பதவிக்காலத்தின் மீதிக் காலத்திற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

படி செலுத்தப் படலாமென.

75. இந்த சபையின் உறுப்பினர்களுக்கும் செயலாருக்கும் விடயத்துக் பொறுப்பான அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் கலந்து கொள்ளல் படியொன்றை ஆளுநரின் அங்கீகாரத்தின் மீது செலுத்தப்படலாம்.

சபையின் கூட்ட நடப்பெண்.

76. சபையின் கூட்ட நடப்பெண் தலைவர் உட்பட ஆகக்குறைந்தது 05 பேர்களாதல் வேண்டும்

நிதியத்தின் வங்கிக் கணக்கு.

77. (1) நிதியத்தின் பெயரில் நடைமுறை வங்கிக் கணக்கொன்றை அரசாங்க வங்கியொன்றில் மாகாண விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளரினால் நடாத்திச் செல்தல் வேண்டும்.

(2) நிதியத்திற்கு கிடைக்கும் சகல பணத் தொகைகளும் இந்த கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(3) மேலதிக நிதி கிடைக்கும் சந்தர்ப்பங்களில் அரசாங்க வங்கியொன்றில் நிலையான வைப்பொன்றிலே இந்தத் தொகை வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் கட்டமைப்பு.

78. நிதியத்தின் கட்டமைப்பு பின்வருமாறாகும்.

(1) கால்நடை அபிவிருத்தி நோக்கங்களுக்காக வருடாந்தம் தயாரிக்கப்படும் கால்நடை அபிவிருத்தி திட்டத்திற்கு அமைவாக மாகாண சபை நிதியத்திலிருந்து வழங்கப்படும் நிதி.
(2) அரசாங்க அல்லது மாகாண சபை நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதி.
(3) நாளாந்தம் மாகாணத்தினுள் பால் 1,000 லீற்றருக்கு மேலாக கொள்வனவு செய்யும் நிறுவனங்களிடமிருந்து லீற்றர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் கிடைக்கும் பங்களிப்புத் தொகை.
(4) மாகாணத்தினுள் விலங்கு அபிவிருத்திக்காக பங்களிப்பு நல்கும் உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற, தனியார் அமைப்புகளினால் செய்யப்படும் நன்கொடைகளும் அளிப்புகளும்.
(5) நிலையான வைப்புக்கான வட்டி
(6) காப்புறுதித் தவணை
(7) கிராமிய கால்நடை அபிவிருத்தி சங்கங்களை கலைத்து முடியதன் பின்னர் மீதியாகும் மேலதிகம்.
(8) இந்த நியதிச்சட்டதிலுள்ள நியதிகளுக்கு முரணாக செய்யப்படும் பிழைகளுக்காக நீதிமன்றத்தினால் அறவிடப்படும் தண்டத்தொகை.
(9) கடன் தொகைகளும் வட்டித் தொகையும்.
(10) நிறுவனங்கள் மற்றும் பண்ணைகள் பதிவு கட்டணம்.
(11) வேறு தோற்றுவாய்களிலிருந்து கிடைக்கும் தொகை.

நிதியத்தின் செலவுகள்.

79. முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் கீழ் வடமேல் மாகாண நிதி ஒழுங்கு விதியிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக நிதியத்தின் நிதியினை பயன்படுத்துவதற்கு விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளருக்கு இயலுமாதல் வேண்டும்.

(1) பால் மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கொடுப்பனவு
(2) பயனாளிகளுக்கு கடன் வழங்குதல்
(3) காப்புறுதி நட்டஈட்டுதொகை வழங்குதல்
(4) நிறுவன மற்றும் நிருவாக செலவுகள்.

80. நிதியத்தின் பணிகள் பின்வருமாறாகும். *நிதியத்தின் பணிகள்.*

(1) பால் உற்பத்தி மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(2) சலுகை கடன் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(3) காப்புறுதி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

(4) விவசாயிகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துதல்

(5) மாகாணம் சார்ந்த ஆராய்ச்சிப் பணிகள்.

(6) மனிதவள அபிவிருத்தி.

81. கணக்காய்வாளர் அதிபதியினால் நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும். *கணக்காய்வு.*

82. நிதியத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக தேவைப்படும் கட்டளைகளை விதிப்பதற்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு இயலுமாதல் வேண்டும். *கட்டளைகளை ஆக்குதல்.*

83. (1) நிதியத்தின் நோக்கங்களை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சினதும் விலங்கு உற்பத்தி சுகாதார திணைக்களத்தினதும் பதவியணியைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளப்படுதல் வேண்டும். *நிதியத்தின் பதவி யணியும் ஊதியமும்.*

(2) பதவியணியின் நோக்கங்களுக்காக மேலதிக ஊதியமொன்று செலுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் படியொன்று ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்படலாம்.

## பாகம் IX

## பொது ஏற்பாடுகள்

84. (1) இந்த நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகள் வழங்குதல் என்பன அமைச்சரினால் செய்யப்படுதல் வேண்டும். *அமைச் சருக்கு உள்ள தத்துவம்.*

(2) இந்த நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவு நிர்ணயமானது அமைச்சரினால் செய்யப்பட வேண்டுமென்பதோடு, வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும்.

(3) மாகாணத்திற்குள்ளும் மாகாணத்திற்கு வெளியேயும் விலங்குகளை கொண்டு செல்லும் போது சந்தர்ப்பத்திற்கேற்ற வரையறைகளை விதிக்கும் அதிகாரம் அமைச்சருக்குரியதாகும்.

(4) மாகாணத்திற்குள் விலங்கு நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் போன்றவற்றிற்கான கட்டளைகளை விதிக்கும் அதிகாரம் அமைச்சருக்குரியதாகும்.

85. (1) இந்த நியதிச்சட்டத்தின் 84(1) ஆம் பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதோடு, அது பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது கட்டளையில் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து குறித்த கட்டளையானது நடைமுறைக்கு வருதலும வேண்டும். *கட்டளைகள்.*

(2) அமைச்சரினால் ஆக்கப்படும் சகல கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் கூடிய விரைவில் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத கட்டளைகள் யாவும் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் விடயமொன்றுக்கு பங்கமின்றி இல்லாதொழிதலும் வேண்டுமென்பதோடு, அது தொடர்பிலான அறிவித்தலொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதலும் வேண்டும்.

86. (1) இந்த நியதிச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளின் கீழ்எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரினால் செய்யப்பட்ட கட்டளையொன்று அல்லது தீர்மானமொன்று சம்பந்தமாக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம். *மேன்முறையீட்டு தத்துவம்.*

(2) அமைச்சரின் கட்டளையின் மீது செயலாளரினால் நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது விசாரணைச் சபையொன்றினால் இது தொடர்பில் செய்யப்படும் விசாரணையொன்றின் சிபாரிசின் மீது குறித்த கட்டளையை அல்லது தீர்மானத்தை உறுதிப்படுத்தவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது திருத்தவோ அமைச்சருக்கு முடியும்.

தகவல் பெற்றுக் கொள்ளும் உரிமை.

87. கால்நடை துறையின் தகவல்கள் கோரப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த நியதிச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சகல தரப்பினர்களும் செம்மையாக மாகாண பணிப்பாளருக்கு வழங்குதல் வேண்டும்.

மாதாந்த அறிக்கை.

88. இந்த நியதிச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மாகாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை கொள்வனவு செய்யும் நிறுவனங்களினால் ஒரு (01) மாத காலத்திற்குள் தாங்கள் கொள்வனவு செய்த அளவு தொடர்பிலான மாதாந்த அறிக்கையொன்றை மாகாணப் பணிப்பாளரினால் விதித்துரைக்கப்படும் படிவத்துக்கு அமைவாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

பங்களிப்பு தொகை.

89. இந்த நியதிச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட நாளாந்தம் மாகாணத்தினுள் பால் 1,000 லீற்றருக்கு மேலாக கொள்வனவு செய்யும் நிறுவனங்கள் லீற்றர் ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் பங்களிப்புத் தொகையொன்றை பால் மேம்பாட்டு நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

கருத்திட்டங்களுக்கு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அங்கீகாரம் பெறல்.

90. மாகாணத்தினுள் ஏதேனும் அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனமொன்று, அமைப்பொன்று, ஆதாரநிலையமொன்று, சங்கமொன்று, கருத்திட்டமொன்று, நிகழ்ச்சித்திட்டமொன்று அல்லது அத்தகைய ஒருங்கிணைவான நிறுவனமொன்று, ஆளொருவர், ஆட்கள் குழுவொன்று ஆகியவற்றினால் கால்நடை விரிவாக்கல், மேம்பாடு, கல்வி, சேவைகள் மற்றும் ஆராய்ச்சி என்பன பொருட்டு ஏதேனும் கருத்திட்டமொன்றை அல்லது நிகழ்ச்சித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் கால்நடை அபிவிருத்தி மாகாணக் குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்தல் வேண்டும்.

பாகம் X

**பிழைகளும் தண்டனைகளும்**

ஏற்பாடுகளை அல்லது கட்டளை களை மீறுதல்.

91. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை அல்லது கட்டளைகளை மீறுகின்ற அத்தகைய எவரேனும் ஆளொருவர் அல்லது நிறுவனமொன்று குற்றமொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

குற்றங்கள்.

92. இந்த நியதிச்சட்டத்தின் 16, 19, 21, 87, 88, 89, 90 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஏற்பாடொன்றை மீறும் ஆள் எவரும் நீதவான் ஒருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் 100,000/- ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணம் அல்லது 12 மாத காலத்தை விஞ்சாத காலத்துக்கு மறியற்தண்டனை என்னும் இரண்டில் ஒரு விதத்திலான தண்டனைக்கு அல்லது இந்த தண்டனைகள் இரண்டிற்கும் ஆட்படுதல் வேண்டும்.

வழக்கு தொடரும் அதிகாரம்.

93. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றமொன்று புரியப்பட்டவிடத்து வழக்கு தொடரும் அதிகாரம் மாகாண பணிப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்படும் உத்தியோகத்தரின் பொறுப்பாதல் வேண்டும்.

பாகம் XI

**பொருள்கோடல்**

பொருள்கோடல்.

94. இந்த நியதிச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலன்றி -

"மாகாணம்" என்னும் போது, வடமேல் மாகாணம் எனவும் ;
"மாகாண சபை" என்னும் போது, வடமேல் மாகாண மாகாண சபை எனவும் ;
"ஆளுநர்" என்னும் போது, வடமேல் மாகாண ஆளுநர் எனவும் ;
"அமைச்சர்"என்னும் போது, வடமேல் மாகாண மாகாண சபையின் கால்நடை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் எனவும்.
"மாகாண அமைச்சு'என்னும் போது, வடமேல் மாகாண மாகாண சபையின் கால்நடை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு எனவும்.

"செயலாளர்" என்னும் போது, வடமேல் மாகாண மாகாண சபையின் கால்நடை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் எனவும் ;

"திணைக்களம்" என்னும் போது, வடமேல் மாகாணத்தின் விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களம் எனவும் ;

"பணிப்பாளர்"என்னும் போது, வடமேல் மாகாணத்தின் விலங்கு உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் எனவும்.

"மாகாண கால்நடை ஆராய்ச்சி" என்னும் போது, மாகாண மட்டத்தில் கால்நடை அபிவிருத்தி செயற்பாட்டின் போது உருவாகும் தொழிநுட்ப பிரச்சினைகள் மற்றும் அதுசார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தலும் புதிய கண்டு பிடிப்புகளுக்கு சிபாரிசுகள் பெற்றுக் கொள்தலும் அறிமுகப்படுத்தப்படும் தொழிநுட்பம் மற்றும் சிபாரிசுகள் ஆகியவற்றின் ஏற்புடைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக மாகாண மட்டத்தில் செய்யப்படும் (அடிப்படை தத்துவங்களை கட்டியெழுப்புவதற்காகவல்ல) முயற்சிகள் எனவும்;

"பண்ணை" என்னும் போது மாடுகள், எருமை மாடுகள், ஆடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள், முயல்கள், கோழி, காடைக்கோழி, வாத்துகள், மற்றும் தீக்கோழி ஆகியவற்றை வளர்க்கும் பராமரிக்கும் கூறு எனவும் ;

"உற்பத்தி நிலையம்" என்னும் போது கால்நடை சார்ந்த உணவுப் பொருட்கள், உபகரணங்கள், கருவிகள், மருந்துகள், விலங்கு உணவுகளை தயாரிக்கும் அல்லது பெறுமதி சேர்க்கும் இடமொன்று எனவும் ;

"கால்நடை" என்னும் போது மாடுகள், எருமை மாடுகள், ஆடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள், முயல்கள், கோழி, வட்டுக்கோழி, வாத்துகள், மற்றும் தீக்கோழி ஆகிய பிராணிகள் எனவும் ;

"அரசாங்க வங்கி" என்னும் போது இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசியசேமிப்பு வங்கி எனவும்;

"நியாயமான காலம்" என்னும் போது ஏதேனும் விடயமொன்றுக்குரியதாக அதன் தன்மைக்கேற்ப சந்தர்ப்பத்திற்கேற்ப மாகாணப் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும் காலம் எனவும் ;

பொருள்படும்.

95. இந்த நியதிச்சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் .

09- 977